**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆனித்திங்கள் 13 ம் நாள்

**இ.ம.எண். 399/2023**

**in**

**அ.வ.எண்.86/2017**

1. K.S.நல்லதம்பி (இறந்துவிட்டார்)
2. K.N.மணிவண்ண சுதேவன்
3. N.கௌதம் செந்தில்வர்மன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. செந்தில்முரளி பிரதீப்
2. P.ரகுபதி
3. P.சாந்தா
4. S.நந்தினி
5. P.செல்வகுமார்
6. R.பெரியசாமி
7. P.திருமூர்த்தி
8. C.பாபுசுரேஷ்
9. P.சாமிதுரை
10. வட்டாட்சியர், காங்கயம் வட்டம்,
 காங்கயம்
11. சார்பதிவாளர், வெள்ளகோவில் சார்பதிவகம்,
 வெள்ளகோவில் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 10.06.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.P.வேதாச்சலம், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 10 மற்றும் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.V.முருகேசன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 9 பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண்.86/2017 வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டு இவ்வழக்கின் வழக்குமூலத்தில் புதிய வழக்கை தாக்கல் செய்ய அனுமதி கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 23 விதி 1(3) மற்றும் பிரிவு 151ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

i) அசல் வழக்கானது 1ம் மனுதாரரான இறந்துபோன 2, 3 மனுதாரர்களின் தகப்பனார் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் மனுதாரர் அசல் வழக்கு தாக்கல் செய்த 2017ம் ஆண்டில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அதனால் இவ்வழக்கை அவரால் பின்னிட்டு கவனிக்க இயலவில்லை. வழக்கு நிலுவையில் இருந்தபோது கடந்த 11.03.2020 தேதியில் 1ம் மனுதாரர் இறந்துவிட்டார். 1ம் மனுதாரரின் இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்து 2, 3 மனுதாரர்களுக்கு

பாத்தியப்பட்டதாகும். அதற்கு பின்னிட்டு 2, 3 மனுதாரர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தைப் பொறுத்து 2, 3 மனுதாரர்களின் தகப்பனாரின் பாத்தியத்தை மறுத்துள்ளது தெரிய வந்தது. கடந்த 11.03.2021 தேதியில் 3ம் மனுதாரர் பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணத்தை 2ம் மனுதாரருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

ii) அதனால் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டு இதே வழக்குமூலத்தில் புதிய வழக்கு தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. 1ம் மனுதாரர் இறந்ததற்கு பின்னிட்டு தாவா சொத்தில் மனுதாரர்களின் பாத்தியத்தை மறுத்து 1ம் எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளார். அதனால் இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டு புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டு இதே வழக்குமூலத்தில் புதிய வழக்கை தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

<u>2. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம் :–</u>

i) மனுதாரர்கள் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர்/பிரதிவாதி இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபனம் செய்ய வேண்டியது.

ii) அசல் வழக்கானது நிலுவையில் இருக்கும்போது 1ம் எதிர்மனுதாரர் கடந்த 11.03.2022ம் தேதி இறந்ததற்கு பின்னிட்டு 2, 3 மனுதாரர்கள் கட்சி

சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1ம் மனுதாரர் இறப்பிற்கு பின்னிட்டு 2, 3 மனுதாரர்கள் தாவா சொத்தை அனுபவித்து வருவதாக கூறுவது உண்மையல்ல. கடந்த 11.03.2021ம் தேதி 3ம் மனுதாரர் 2ம் மனுதாரருக்கு தாவா சொத்தை பொறுத்து விடுதலை எழுதிக் கொடுத்துள்ளதாகவும் அதனால் தாவா சொத்து முழுவதும் 2ம் மனுதாரருக்கு பாத்தியம் உள்ளதாக கூறுவது உண்மையல்ல.

iii) எதிர்மனுதாரர் தாவா சொத்தின் உரிமை குறித்து பிரச்சனை செய்து தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என எதிர்வழக்குரையில் கூறியுள்ளதால் அதனால் மனுதாரர்கள் மேற்படி வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டு இந்த வழக்கின் வழக்குமூலத்திலேயே புதிய வழக்கை விளம்புகைக்காக தாக்கல் செய்ய இருப்பதாகவும், அதனால் மேற்படி வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறும் இம்மனு தாக்கல் செய்துள்ளது எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் இவ்வழக்கை நிலைக்கால உறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த வழக்கிலேயே உரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தி விளம்புகை பரிகாரம் கோர வழிவகை உண்டு. அவ்வாறு இருக்கும்போது மனுதாரர்கள் அசல் வழக்கை 2017ம் வருடத்தில் தாக்கல் செய்துவிட்டு 6 வருடங்கள் முடிவடைந்த பின்பு பின்யோசனையாக விளம்புகை பரிகாரம் கோர இருப்பதாகவும் அதனால் இவ்வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறு கூறுவது ஏற்கத்தக்கதல்ல. அதனால் மனுதாரர்கள் நீதிமன்ற அனுமதியுடன் வழக்கை வாபஸ் பெற முடியாது என்பதால் மனுதாரரின் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள், 1, 10 மற்றும் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும்

சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

5. தீர்வு:–

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கு நிலுவையில் இருந்தபோது கடந்த 11.03.2020 தேதியில் 1ம் மனுதாரர் இறந்துவிட்டார் என்றும் அதற்கு பின்னிட்டு 2, 3 மனுதாரர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தைப் பொறுத்து 2, 3 மனுதாரர்களின் தகப்பனாரின் பாத்தியத்தை மறுத்துள்ளது தெரிய வந்தது என்றும் கடந்த 11.03.2021 தேதியில் 3ம் மனுதாரர் பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணத்தை 2ம் மனுதாரருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும் எனவே தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டு இதே வழக்குமூலத்தில் புதிய வழக்கை தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

6. 1ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதி தரப்பில் இந்த வழக்கின் வழக்குமூலத்திலேயே புதிய வழக்கை விளம்புகைக்காக தாக்கல் செய்ய இருப்பதாகவும், அதனால் மேற்படி வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறும் இம்மனு தாக்கல் செய்துள்ளது எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர்கள் இவ்வழக்கை நிலைக்கால

உறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த வழக்கிலேயே உரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தி விளம்புகை பரிகாரம் கோர வழிவகை உண்டு என்றும் அவ்வாறு இருக்கும்போது மனுதாரர்கள் அசல் வழக்கை 2017 ம் வருடத்தில் தாக்கல் செய்துவிட்டு 6 வருடங்கள் முடிவடைந்த பின்பு பின்யோசனையாக விளம்புகை பரிகாரம் கோர இருப்பதாகவும் அதனால் இவ்வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறு கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது முதலில் 1ம் மனுதாரர் இறந்துபோன நல்லதம்பி என்பவரால் 10ம் பிரதிவாதி 1 முதல் 9 பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்து சம்பந்தமாக வருவாய்த்துறை ஆவணங்களில் 1ம் வாதிக்கு பாதிப்பு ஏற்படும்படி மாறுதல் ஏதும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்து சம்பந்தமாக 11ம் பிரதிவாதி 1 முதல் 9 பிரதிவாதிகள் பெயரில் வாதிக்கு பாதிப்பு ஏற்படும்படி எந்தவிதமான ஆவணங்களையும் பதிவு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கடந்த 24.08.2017 அன்று 10 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 08.09.2017 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 06.03.2018 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

8. பின்னிட்டு கடந்த 11.03.2020ம் தேதியன்று 1ம் மனுதாரர்/1ம் வாதி இறந்துவிட்டதால், அசல் வழக்கில் 1ம் வாதியின் வாரிசான 2, 3 வாதிகளை அசல் வழக்கில் கட்சி சேர்க்க வேண்டி கடந்த 29.09.2021 அன்று

இ.ம.எண்.223/2022 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு கடந்த 19.06.2022 அம்மனு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் 2, 3 வாதிகள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். பின்னிட்டு அசல் வழக்கை திருத்தம் செய்யக்கோரி கடந்த 05.08.2022 அன்று இ.ம.எண்.455/2022 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அன்றே அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கானது திருத்தம் செய்யப்பட்டதற்கு பின்னிட்டு கடந்த 16.08.2023 அன்று மனுதாரர்களால் அசல் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டு இந்த வழக்கின் வழக்குமூலத்திலேயே புதிய வழக்கை தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கில் 08.09.2017 அன்று 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்தில் வாதிக்கு எந்த பாத்தியமும், உரிமையும், சுவாதீனமும் இல்லை என்றும் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது. பின்னிட்டு தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக வழக்குரையை திருத்தம் செய்ய 1ம் மனுதாரர் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னிட்டு 2, 3 மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டதற்கு பின்னிட்டு தாவா சொத்தில் 1ம் மனுதாரரின் பாத்தியத்தை பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் மறுத்து கட்சி செய்துள்ளதால் அசல் வழக்கை விளம்புகை பரிகாரத்திற்கு திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக இந்த வழக்கின் வழக்குமூலத்திலேயே புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதிகோரி அசல் வழக்கை திரும்ப பெற கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கை தாவா சொத்தைப் பொறுத்த விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்ய வேண்டும் என்று

சொல்லப்பட்டுள்ள நிலையில் அதைப் பொறுத்து உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தி இவ்வழக்கிலேயே மேற்படி திருத்தங்களை செய்ய இயலும் என்ற நிலையில் மேற்படி திருத்தம் செய்ய வேண்டிய காரணத்திற்காக இவ்வழக்கை திரும்ப பெற வேண்டிய அவசியம் இல்லை. மேலும் இவ்வழக்கில் அசல் வழக்குரையில் Formal Defect உள்ளதாக மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை.

11. தாவா சொத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றும் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் குறிப்பிட்டு கடந்த 08.09.2017 தேதியிலேயே 1ம் எதிர்மனுதாரரால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது சுமார் 6 ஆண்டுகள் காலதாமதமாக காலவரையறை கடந்து அசல் வழக்கை விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்ய அசல் வழக்கை திரும்ப பெற அனுமதி அளிக்க வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை. மேலும் 2017ம் ஆண்டிலிருந்து 1ம் மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் இருந்து இவ்வழக்கை கவனிக்க இயலாத நிலையில் இருந்தார் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதியை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித ஆவணங்களும் சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை.

12. மேலும் அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எவ்வித பரிகாரங்களும் கேட்கப்படவில்லை. 10 மற்றும் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டுமே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அசல் வழக்கில் மனுதாரர்களால் கேட்கப்பட்டு

செலவுத்தொகையை 1 முதல் 9 பிரதிவாதிகள் வாதிகளுக்கு வழங்க வேண்டும் என்று மட்டுமே பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மேலும் 2017ம் ஆண்டு 1ம் எதிர்மனுதாரரால் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு அது குறித்து மனுதாரர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோருவதற்கான காலவரையறை கடந்ததற்கு பின்னிட்டு அசல் வழக்குரையை திரும்ப பெற்று அதே வழக்குமூலத்தில் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது 2017ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் அசல் வழக்கில் மேற்கொண்டு வீணான காலதாமதத்தை ஏற்படுத்தவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. எனவே மேலே கண்ட பரிசீலனைகளின் அடிப்படையிலும், விவாதங்களின் அடிப்படையிலும் அசல் வழக்கானது மனுதாரர்களால் தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டு இந்த வழக்கின் வழக்குமூலத்திலேயே விளம்புகை பரிகாரம் கோரி புதிய வழக்கை தாக்கல் செய்ய அனுமதி கோரி அதற்கான காலவரையறை கடந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாலும், இம்மனுவில் மனுதாரர் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்பதாலும், அசல் வழக்கின் வழக்குரையில் Formal Defect ஏற்பட்டுள்ளது என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லியுள்ளது இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை என்பதாலும், அசல் வழக்கில் வீணான காலதாமதத்தை ஏற்படுத்தவே மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், மேலேகண்ட விவாதங்கள்

அடிப்படையிலும் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 27 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.06.27 19:50:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.06.27 19:50:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.